**47. அரவான் கதை**

அரவான் என்பவன் உலூபி என்னும் நாககன்னியிடம் அருச்சுனனுக்குப் பிறந்தவன். மிகுதிறல் அமையப்பெற்றவன். சிறந்த உறுப்புக்களும் எதிர் மயிர்களும் இயைந்தவன். இவனை எவராலும்வெல்ல முடியாது. பாரதப் போரில்



பகைவர்களை அழித்தொழிக்க வேண்டு மென்று துடிதுடித்துக்கொண்டிருந்தான். துரியோதனன் போர் தொடங்குவதற்கு முன் களப் பலி கொடுக்க எண்ணினான். களப்பலிக்கு இந்த அரவானே சிறந்தவன் என்று முடிவு செய்தான். சூழ்ச்சியாக இவனிடம் வந்தான். பாண்டவர்கள் பகைவர்களை யும் பண்புடன் போற்றும் பான்மை அமையப் பெற்றவர் கள். அம்முறைப்படிஇவனுந் துரியோதனனை வரவேற் றுப் போற்றினான். என்னிடம் வந்தது யாது கருதி ? என்றான். துரியோதனன்வந்த காரியத்தைச் சொன்னான். இவன் மறுக்கவில்லை. "என்னைக் கொண்டுபோய்க் களப்பலி கொடுத் துக்கொள்ளுக" என்றான். ஆனால் மாயம் வல்ல மாயவன் இவன் துரியோதனனுக்குப் பயன்படா தபடி சூழ்ச்சி செய்துபாண்டவர்கட்காகக் கொண்டுபோய்ப் பலி கொடுத்துவிட்டான். அரவான் தன்னையே கொடுத்தமையின் இன்றுவரை மிகுந்த புகழ் பெற்று விளங்குகிறான். புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ்நிலைநிற்பதாகும் சாவும் அறிவிற் சிறந்தவர்கட்கு அல்லாமல் மற்றவர்கட்கு இல்லை யென்பது இவனிடம்விளங்கியது.

[புகழ்நிலை நிறுத்தல்]

(பாரதம்)